## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 6 - வாரணமாயிரம்[1]
## (ஆயனை மணம் செய்து கொள்வதாகத் தான் கண்ட கனாவைத் தலைவி தோழிக்குக் கூறுதல்)

556 * வாரணம் ஆயிரம் * சூழ வலம் செய்து *
நாரண நம்பி * நடக்கின்றான் என்றெதிர் **
பூரண பொற்குடம் * வைத்துப் புரம்[2] எங்கும் *
தோரணம் நாட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 1

557 நாளை வதுவை * மணம் என்று நாள் இட்டு *
பாளை கமுகு * பரிசுடைப் பந்தற் கீழ் **
கோள் அரி மாதவன் * கோவிந்தன் என்பான் ஓர் *
காளை புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 2

558 இந்திரன் உள்ளிட்ட * தேவர் குழாம் எல்லாம் *
வந்திருந்து என்னை * மகள் பேசி மந்திரித்து **
மந்திரக் கோடி உடுத்தி * மண மாலை *
அந்தரி சூட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 3

559 நால் திசைத் தீர்த்தம் கொணர்ந்து * நனி நல்கி *
பார்ப்பனச் சிட்டர்கள் * பல்லார்[3] எடுத்தேத்தி **
பூப்புனை கண்ணிப் * புனிதனோடு என்தன்னை *
காப்பு நாண் கட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 4

560 கதிரொளி தீபம் * கலசம் உடன் ஏந்தி *
சதிர் இளமங்கையர் தாம் * வந்தெதிர் கொள்ள **
மதுரையார் மன்னன் * அடி நிலை தொட்டு எங்கும் *
அதிரப் புகுதக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 5

561 மத்தளம் கொட்ட * வரி சங்கம் நின்றூத *
முத்துடைத் தாமம் * நிறை தாழ்ந்த பந்தற் கீழ் **
மைத்துனன் நம்பி * மதுசூதன் வந்து என்னைக் *
கைத்தலம் பற்றக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 6

562 வாய் நல்லார் * நல்ல மறை ஓதி மந்திரத்தால் *
பாசிலை நாணல் படுத்துப் * பரிதி வைத்து **
காய்சினமா களிறு அன்னான் * என் கைப் பற்றி *
தீ வலம் செய்யக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 7

---
[1] இது கல்யாண காலங்களில் பாடும் சீர்ப் பாடல்
[2] புறம்
[3] பல்லாண்டு

563 இம்மைக்கும் * ஏழ் ஏழ் பிறவிக்கும் பற்றாவான் *
நம்மை உடையவன் * நாராயணன் நம்பி **
செம்மை உடைய * திருக்கையால் தாள் பற்றி *
அம்மி மிதிக்கக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 8

564 வரிசிலை வாள் முகத்து * என்னைமார் தாம் வந்திட்டு *
எரி முகம் பாரித்து * என்னை முன்னே நிறுத்தி **
அரி முகன் அச்சுதன் * கைம்மேல் என் கை வைத்து *
பொரி முகம் தட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 9

565 குங்குமம் அப்பிக் * குளிர் சாந்தமட்டித்து *
மங்கல வீதி * வலம் செய்து மண நீர் **
அங்கு அவனோடும் * உடன் சென்று அங்கானை மேல் *
மஞ்சனம் ஆட்டக் * கனாக் கண்டேன் தோழீ! நான் 10

566 * ஆயனுக்காகத் * தான் கண்ட கனாவினை *
வேயர் புகழ் * வில்லிபுத்தூர்க் கோன் கோதை சொல் **
தூய தமிழ் மாலை * ஈரைந்தும் வல்லவர் *
வாயு நன்மக்களைப் பெற்று * மகிழ்வரே 11

**அடிவரவு:** வாரணம் நாளை இந்திரன் நால்திசை கதிர் மத்தளம் வாய்
இம்மைக்கும் வரிசிலை குங்குமம் ஆயனுக்காக கருப்பூரம்